MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# நீர்வழிப்படூஉம் புதினம் உணர்த்தும் திருமணச் சடங்குகள்

**பெ.ஓவியவதி**
**முனைவர் பட்டஆய்வாளர் (முழுநேரம்),**
**தமிழ் உயராய்வுத்துறை**
**அரசுகலைக்கல்லூரி (தன்னாட்சி),**
**கோயம்புத்தூர் - 641 018**
**அலைபேசி: 9842972689**
**மின்னஞ்சல்: oviya1701Shgmail.com**

**நெறியாளர்**
**முனைவர் ந.மகாலட்சுமி**
**இணைப்பேராசிரியர்**
**தமிழ் உயராய்வுத்துறை,**
**அரசுகலைக்கல்லூரி (தன்னாட்சி),**
**கோயம்புத்தூர் - 641 018.**
**அலைபேசி: 8344696198**

## WATER-BORNE NOVEL REFLECTIVE WEDDING RITUALS

P. OVIYAVATHI
PHD (FULLTIME)
DEPARTMENT OF TAMIL
GOVERNMENT ARTS COLLEGE (AUTONOMOUS)
COIMBATORE - 641018.

**JULY-AUGUST**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

GUIDE
Dr.N. MAHALAKSHMI
ASSISTANT PROFESSOR
DEPARTMENT OF TAMIL
GOVERNMENT ARTS COLLEGE (AUTONOMOUS )
COIMBATORE- 641018.

ABSTRACT:

In today's era, various literary genres are growing rapidly in various directions. Among them, the novel literary genre has a special place. Novels appear to depict the lives of progressive people in today's environment. Ritual is a set of specific procedures accepted through religion or tradition. Lifestyle is the daily and frequent practices followed in human life. How the wedding rituals mentioned in the novel "The Water-Borrower" differ from one society to another, This novel explores how the society of the colonizers reflects their social identity, culture, characteristics, and customs.

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய காலக்கட்டத்தில் பலவகையான இலக்கிய வகைகள் பல்வேறு திசைகளில் பெரிதாக வளர்ந்து வருகின்றன. அவற்றில் புதின இலக்கிய வகைத் தனியாக சிறப்பிடம் பெற்று விளங்குகிறது. இன்றைய சூழலில் முன்னேறும் மக்களின் வாழ்வை சித்தரிக்கும் வகையில் புதினங்கள் தோன்றுகின்றன. சடங்கு என்பது சமயம் அல்லது மரபு வழியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட, குறிப்பிட்ட சிலசெயல்முறைகளின் தொகுப்பாகும். மனித வாழ்வில் அன்றாடம் மற்றும் அடிக்கடி பின்பற்றப்படும் நடைமுறைகளே வாழ்க்கை முறையாகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

நீர்வழிப்படூஉம் புதினத்தில் குறிப்பிடும் திருமணச்சடங்குகள் ஒவ்வொரு சமூகங்களிலிருந்து எவ்வாறு வேறுபட்டிருக்கிறது என்பதையும், இப்புதினத்தில் குறிப்பிடும், குடிநாவிதர்களின் சமூகத்தில் எவ்வாறு அவர்களின் சமூக அடையாளத்தையும், கலாச்சாரத்தையும், பண்புகளையும், பழக்கவழக்கங்களையும் உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

**முன்னுரை**

சங்ககாலம் முதல் சமகாலம் வரை உள்ள மனிதர்கள் தங்களின் வாழ்வில் முன்னேறும் ஒவ்வொரு கட்டத்திலும் சடங்குகளை காலம் தோறும் பின்பற்றி வருகின்றனர். மனிதனின் அறிவு மேம்பட ஒழுக்கமுறைகளும், பண்பாடுகளும் தோன்றிய காலத்திலிருந்தே சடங்குகளும் தோன்றின. இவ்வாறு பிறப்பு முதல் இறப்பு வரையான சடங்குகளில் திருமணம் முக்கியத்துவம் பெறுகிறது. அதனால் திருமணச் சடங்குகள் குறித்து அறியும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**மனிதனின் வாழ்க்கைமுறை**

ஒரு சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையின் தொன்றுதொட்டு வழக்கப்படுத்தி வரும் வெளிபாடே அச்சமயத்தின் பண்பாடாகிறது இதனையே வாழ்வியல் என்பர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

நம் முன்னோர்கள் மற்றும் சென்ற தலைமுறையினரிடம் பெற்றுக்கொண்ட வாழ்க்கை முறையே வாழ்வியல் என்கின்றோம் இதனை,

**“யாதும் ஊரேயாவருங் கேளிர்**

**தீதும் நன்றும்பிறர்தரவாரா**

**நோதலுந் தணிதலுமவற்றோரன்ன” (புறம், பா.24)**

என்ற சங்க இலக்கிய பாடல்வரிகள் குறிப்பிடுகின்றது. இவ்வாறு மனிதர்கள் தங்கள் முன்னோர்கள் பின்பற்றிய நல்ல ஒழுக்கங்களையும், பண்பாடுகளையும், சடங்குகளையும் தங்களின் வாழ்க்கைமுறைகளாக வாழ்ந்து வருகின்றனர் என்பதை அறியமுடிகிறது.

**சடங்குமுறைகள்**

ஒரே சமூகத்தில் வாழும் மனிதர்கள் தங்களின் வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரையில் நடைபெறும் அனைத்து முக்கிய நிகழ்வுகளுக்கும் சடங்குகளை முக்கிய பங்காக வகுத்து வைத்துள்ளனர். அதற்கு காரணகாரியத்துடன் கூடிய பல்வேறு செயல்களைச் செய்து கொண்டிருந்தான். அதுவே காலப்போக்கில் சடங்குகளாக மாறியது. சடங்கு என்றால் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளைச் செவ்வனே செய்து முடிக்கும் ஓர்; ஒழுங்குமுறைபடுத்தும் தன்மைகொண்டது இதனை,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

**“பொய்யும் வழுவும் தோன்றியபின்னர்**

**ஐயர் யாத்தனர் கரணம் என்ப” (தொல்.கற்.நூற்பா-5)**

எனத் தொல்காப்பிய நூற்பாவில் சடங்கு என்ற பொருளில் கரணம் என்பது பயன்படுத்தப் பட்டுள்ளதை அறியமுடிகிறது. பொய்யும், குற்றமும் அதிகமானதால் அந்தணர்களை வைத்துதிருமணச் சடங்குசெய்யும் வழக்கம் ஏற்பட்டது எனத் தொல்காப்பியர் கூறுகிறார். அக்கால மனிதர் தங்களின் வாழ்வில் முக்கிய சடங்குகளாக பிறப்புச் சடங்கு, பூப்புச் சடங்கு, திருமணச் சடங்கு, வளைகாப்புச் சடங்கு, இறப்புச் சடங்கு போன்ற சடங்குகள் இன்று வரை பின்பற்றப்பட்டுவருகின்றன. அவற்றுள் நீர்வழிப்படூஉம் புதினம் மக்களின் திருமணம் மற்றும் இழவுச் சடங்குகளை மிகுதியாகக் கூறுகிறது. அவற்றுள் திருமணச் சடங்குகள் இன்றியமையாததாக அமைந்துள்ளன.

**திருமணச் சடங்குகள்**

மனிதனின் வாழ்வில் முக்கிய இடத்தைப் பெறுவது திருமணம் ஆகும். வாழ்விற்குச் சிறந்தத் துணையைத் தேடித் தர வேண்டிய முக்கிய பொறுப்பு குடும்பப் பெரியவர்களைச் சார்ந்தது விடுவதால் ஓர் ஒழுங்கமைப்பை நிலைநாட்ட முதலில் பொருத்தம் பார்த்தப்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

பின் திருமணச் சடங்குகளை ஆரம்பிக்கின்றனர் என்பதை அறியமுடிகிறது.

**திருமணம்**

இருமனம் ஒத்தது திருமணம் என்பர். ஆண், பெண் இரு உள்ளப்பிணைப்பு காதல், காதல் வழி களவு மணம்; உண்டு. இருமுதுகுடியவர் ஏற்பாட்டில் திருமணத்திற்குப் பின் காதலோடு கலந்த வாழ்வியலும் உண்டு. இத்திருமணத்தைத் தொல்காப்பியர்;,

"**கற்பெனப்படுவதுகரணமொடுபுணரக்கொளக்குர்**

**மரபின் கிழவன் கிழத்தியைக்**

**கொளக்குரிமரபினோர் கொடுப்பக்கொள் வதுவே**"

**(புறம் பா.26)**

என்று தொல்காப்பியர் கூறிய கற்பியல் திருமணமாம். தகுதியுடைய மரபில் வந்தவன், தகுதியுடைய மரபில் வந்தவளை அவளது பெற்றோர் மனம் ஒத்துவந்து பெண் கொடுக்கக் கொள்வது தான் கற்புவழித் திருமணமாகும் எனத் தொல்காப்பிய நூற்பா வழி அறியமுடிகிறது.

**பொருத்தம் பார்த்தல்**

திருமணச் சடங்கில் முதற்படி பொருத்தம் பார்த்தல் ஆகும். பத்துவகைப் பொருத்தமும் பார்த்து மணம் முடிப்பதே கொங்கு மக்களின் கொள்கையாகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

**“பிறப்பேகுடிமைஆண்மைஆண்டோடு**

**உருவுநிறுத்தகாமவாயில்**

**நிறையேஅருளேஉணர்வோடுதிருவென**

**முறையுறக் கிளந ;தஒப்பினதுவகையே”**

**(தொல்.மெய். நூற்பா-25)**

என்ற நூற்பாவில் பிறப்பு(குலம்), குடி, ஆணிற்கு ஆள்வினையும், பெண்ணிற்குப் பெண்ணீர்மை, ஆணிற்கு ஆண்டு இருபதும் பெண்ணிற்கு பதினாறும், இருவர் மாட்டு தோன்றும் அன்பு, அடக்கம், அருள்இ கருணை, அறிவு,செல்வம், போன்ற பொருத்தங்கள் ஒத்த தலைவனுக்கும் தலைவிக்கும் இருக்கவேண்டும் எனத் தொல்காப்பியர் கூறுகிறார்.

**“தடம் வழி பார்ப்பதிலிருந்து, பெண்ணுக்கோ ஆணுக்கோ செவ்வாய் தோஷம் இருக்கிறதா? ராகு,கேது இருக்கிறதா? சனி எத்தனையாவது இடத்தில் இருக்கிறது? சந்திரன் இருக்கும் ராசி எது? குரு பலம் கூடி வந்திருக்கிறதா? பெண்ணுக்கு மாங்கல்ய தோஷம் இருக்கிறதா? திசாபுத்தி பலன்கள் எப்படியிருக்கின்றன? பத்துப் பொருத்தங்களில் எத்தனை சாதகமாக இருக்கின்றன?” - நீர்வழி (ப.எ.54)**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

என்பதை இப்புதினம் வழி இந்தப் பத்துவகைப் பொருத்தமும் மணமக்களுக்கு ஒப்பாக இருக்கிறதா? என்பதைக் கண்ட பின்னரே இம்மக்கள் திருமணத்தை உறுதி செய்கிறார்கள். ஏன்பதை இப்புதினம் வழி அறியமுடிகிறது. எனப் பொருத்தம பார்ப்பதிலிருந்தே தங்கள் கடமைகளைத் தொடங்கிவிடுகின்றனர் என்பதை அறியமுடிகிறது.

**சோதிடம் பார்த்தல்**

திருமணம் உறுதி செய்யப் பலவகையிலும் ஆலோசனை செய்வர். ஏனென்றால், "**திருமணம் ஆயிரங்காலத்துப் பயிர், பார்த்துதான் செய்யவேண்டும்**" என்பர். முதலில் திருமணத்திற்குக் குருபலன் இருக்கிறதா என்பதை அறிவர், அதன்பின் "**ஆண், பெண் இருவரின் ஜாதகங்களோடு நல்ல ஜோதிடனைப் பார்த்துக் கேட்டறிந்து கொண்டு வருவதிலிருந்து சொத்துப்பத்து முதல் நடத்தைகள் வரை துப்பறிந்து கொண்டு வருவதிலிருந்து**"

**- நீர்வழி (ப.எ.54)**

என ஜாதகம் பார்ப்பர். இருவீட்டாரும் தனித்தனியாக முதற்கண் பார்த்துக் கொள்வர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

அதற்குப் பின், பெண் ஜாதகத்தை மாப்பிளைவீட்டாரும், மாப்பிளை ஜாதகத்தை பெண்வீட்டாரும் வாங்கி ஒப்பிட்டுப் பார்ப்பர், அல்லது நடைமுறையில் இறைவனிடம் பூ வைத்துக் கேட்கும் பழக்கமும் உண்டு என்பதை,

**“இந்தமாப்பிள்ளைபேர்தனைக் கூறி இந்தப் பெண்ணின் பேர்தனைச் சொல்லி இருவர் பெயரையும் ராசியில் கேட்டுக் கையில் ஓடியரேகைப் பொருத்தம் ஒன்பதுபொருத்தம் உண்டெனபார்த்து தாலிப் பொருத்தம் தவறாமல் கேட்டு”**

**(கொங்குமங்கலவாழ்த்து, பா.வ 14-19)**

மணமகன் வீட்டார் பணமும், பொருளும் கொடுத்துப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும் முறை தான் வழக்கில்; உள்ளது. மணப் பெண்ணுக்குப் பட்டுச் சீலையும், பரியத்தொகையையும் மணமகன்வீட்டார் வழங்குவர் என்பதை அறியமுடிகிறது.

**நிச்சயதார்த்தம்**

திருமணத்திற்கும் அதனையொட்டியப் பிற சடங்குகளுக்குமான நாளும், நேரமும் நிச்சயிக்கும் விதமாகச் செய்யப்படும் ‘நிச்சயதார்த்தம்’ தமிழகத்தில் பல வகுப்பாருக்கும் உரிய மணவிழாச் சடங்காகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

மணமகனைச் சேர்ந்த உறவினர்கள் ஒற்றைப்படை எண்ணிக்கையில் பெண் வீட்டிற்குச் சென்று மணமகனின் குலம்இ கோத்திரம் கூறி, பெண்ணை மணம் முடித்துத் தர நிச்சயதார்த்தத்தன்று வேண்டுவர். இவ்வாறு வேண்டுதலைக் ‘கோரல்’ என்பர். அதன் பின்னர் மணப்பெண்ணை கிழக்குப் பார்த்தவாறு அமரச்செய்து, பூசைசெய்த பின்னர்க் கொண்டுவந்த பட்டுப்புடவையை மணமகளை உடுத்தச்செய்வர். பின்னர் மணப்பெண்ணின் கன்னங்களிலும், கைகளிலும் சந்தனம் பூசி, குங்குமம், பூ போன்ற மங்கலப் பொருட்களை வைத்து சீர்காரப் பெண்கள் ஆசீர்வதிப்பர். மணமகன் வீட்டில் இருந்து கொண்டு வந்த தாம்பூலத் தட்டுகளை மணப்பெண்ணின் தலையை இடது மற்றும் வலப்புறமாகச் சுற்றிய பின் இப்பெண்ணை உறுதியாக திருமணம் செய்து கொள்கிறோம் என்பதற்கு அடையாளமாக“உறுதிநகை” எனப்படும் பொன்னால் ஆன நகையை மாப்பிள்ளையின் சகோதரி அணிவிப்பார். இவ்வாறு நிச்சயதார்த்தம் நிறைவு பெறுகிறது. பின்னர் திருமணத்திற்கான நாள் உறுதி செய்யப்பட்டுத் திருமணநாள் சடங்குகள் தொடங்குகின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

**திருமணநாள் சடங்குகள்**

திருமணம் ஐந்து நாள் நிகழ்ச்சியாக நடைபெறும். முதல் நாள் விருந்து, அடுத்த நாள் திருமணநாள், மூன்றாம் நாள் முகூர்த்த நாள், நான்காம் நாள் மறு மூச்சு விருந்து, ஐந்தாம் நாள் பெண் கூட்டி வருதல் என மிகவும் விமர்சியாக கொண்டாடப்படும் சடங்காகும்;. திருமண நாள் காலையில் பந்தல் அலங்காரம் செய்து மூகூர்த்தக்கால் இடுதலே திருமணத்தின் முதல் சடங்காகும்.

**முடிவுரை**

மனித வாழ்வின் அன்றாட செயல்பாடுகள், பழக்கங்கள், உளவியல், தேவைகள், பொழுதுபோக்குகள், வேலை போன்ற செயல்பாடுகளை வாழ்வியல் குறிக்கின்றது. சடங்கு என்பது சமயம் அல்லது மரபு வழியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட சில செயல்முறைகளின் தொகுப்பே சடங்காகும். மனித வாழ்வின் அனைத்து முக்கிய நிகழ்ச்சிகளிலும் சடங்குகள் இன்றியமையாததாக அமைகிறது. சடங்குகள் செய்வதன் மூலம் மக்கள் நன்மை அடைந்தனர் என்பதையும், அதனால் முன்னோர்கள் கூறிய வழியில் சடங்குகளைப் பின்பற்றினால் மக்களுக்கு நன்மை உண்டாகும் என்பதையும் அறியமுடிகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume : 3 / Issue 3/ JULY 2025 E- ISSN 3049-3676 (Online)

சடங்குகள் மங்கலச் சடங்குஇ மங்கலச் சடங்கு என இருவகைச் சடங்குகள் உள்ளன. அவற்றுள் மங்கலச் சடங்கான திருமணச் சடங்கினைப் பற்றயும், திருமணத்தை விமர்சையாக கொண்டாடப்படுகின்றனர் என்பதையும், திருமணம் ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் வாழ்வின் எவ்வளவு முக்கியபங்காக இருக்கிறது என்பதைக் குறிப்பிடும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**பார்வை நூல்கள்**

1.நீர்வழிப்படூஉம், தி பிரிண்ட் பார்க், சென்னை – 600 117.

2.புறநானூறு மூலமும் உரையும், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்தநூற்பதிப்புக் கழகம் லிட், சென்னை-600 018, பதிப்பு -2007.

3.தொல்காப்பியம் தெளிவுரை, கதிர் பதிப்பகம், திருவையாறு- 613 204.முதற்பதிப்பு -2012.

4.கொங்கு மங்கல வாழ்த்து மனோகர் டிராவல்ஸ், ஈரோடு-1, பதிப்பு – 2020.